# கனிமொழி



## செயற்கையாக மனிதனை உருவாக்க முடியுமா?

10/

# பண்டாரகர் சி. இலக்குவனார் ஒரு மேதகை

இலக்குவனாரும் யானும் ஆறாம் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரை அரசர் மடத்திலும் ஒறுத்தவன் நாட்டிலும் உடன் பயின்றோம்.

பதினோராம் வகுப்பு தேறியபின் இலக்குவனார் திருஐயாறு புலவர் கல்லூரியில் சேர்ந்து தமிழ்ப்புலமை பெற்று நன்னிலம் உயர்பள்ளியில் தமிழாசிரியர் ஆனார். பின்னர் தனியே பயின்று முதுகலை, மெய்யறிவு முதுகலைப் பட்டங்கள் பெற்றார். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகத்திலும் தமிழ்ப் பேராசிரியரானார்.

தொல்காப்பியத்தை ஆங்கில மொழிபெயர்ப்புச் செய்தார். அதனாற் பண்டாரகர் (Ph.D.) பட்டம் பெற்றார்.

விருதுநகர் செந்தில்குமார் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார்.

இலக்கியம் என்னும் ஒரு தமிழ் மாதிகை நடத்தினார்.

மதுரை, முகவை, திருநெல்வேலி மாவட்டங்களில் 1948-ல் தமிழ் மறுமலர்ச்சிச் சொற்பொழிவுகள் நடத்தினார்.

1948 பொங்கலன்று அவர் வதிந்த இல்லம் தீக்கொளுவப்பட்டது.

பின்னர் மதுரை தாயுமானவர் இந்துக்கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

மதுரை பல்கலைக்கழகத் துணைவேந்தர் (V.C.) பதவிபெற முயன்றார். அப்போது அது 'கிடைக்கவில்லை!

நாகர்கோயில் கல்லூரியில் பணியேற்றார்! மதுரை பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருந்த திரு. மு.வ. ஓய்வு பெற்றார். அந்த இடத்தைத் தனக்குத் தருமாறு கலைஞரையும், பேராசிரியரையும் கண்டு கேட்டுவிட்டுத் திருத்துறைப் பூண்டிக்குப் போந்து என்னிடம் விவரம் கூறிவிட்டு மதுரைக்குச் சென்றார்.

போகும்போழ்து கால்விரலில் தொடுதோலால் ஏற்பட்ட புண்ணைக் காட்டிச் சென்றார். மதுரை திருநகர் சென்றதும் அப்புண் புரையோடி இராசாசி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பண்டுவம் பார்த்தும், பயனளிக்காமல் அங்கேயே இறுதி மூச்சைவிட்டார்!

யார் யாருக்கோ உருவச்சிலையமைக்கும் தமிழக அரசு 'அவரை' மறந்துவிட்டது ஏனோ?

அவருடைய மக்களில் பர்.சி.இ. மறைமலை, சி.இ. திருவள்ளுவன் குறிப்பிடத்தக்கார்.

வாழ்க இலக்குவனார் புகழ்! வளர்க அவர் தமிழ்ப்பணி!

**வி.பொ. பழனிவேலனார், எக்கல்.**